மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 16ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஸ்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>16.02.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தகப்பனாருக்கு என்ன தொழில் என்றால் முதலில் டிராக்டர் ஓட்டி வந்தார் தற்போது தரியை பார்த்து வருகிறார். என் தாயார் என் தகப்பனாரோடு சேர்ந்து தான் வேலை செய்கிறார். என் பெற்றோருக்கு நான் ஒரே மகன் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் காங்கேயம் பழைய கோட்டை சாலையில் செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம் வைத்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆமாம்.

2. பெற்றோர்கள் பார்த்து வைத்த திருமணமா என்றால் இல்லை நானாக விரும்பி திருமணம் செய்து கொண்டேன். எனக்கு குடும்ப அட்டை தனியாக உள்ளது எனது குடும்ப அட்டை 44, கரட்டுப்பாளையம் என்ற முகவரியில் உள்ளது. நான் என் பெற்றோரோடு வசிக்கவில்லை தனியாகத்தான் வசிக்கிறேன்.

கரட்டுப்பாளையத்தில் எங்களுக்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு வீடு தான் உள்ளது அதில் பெற்றோர்கள் வசிக்கிறார்கள் நான் தற்போது என் மாமா வீட்டில் வாடகைக்கு இருந்து வருகிறேன். நான் எனது திருமணத்திற்கு பின்னிட்டு என் மாமா வீட்டில் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம். நான் இளங்கலை பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். என் அப்பா பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். என் அம்மா மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளார். தாவா சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் என்பதை காட்ட நான் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

3. தாவா சொத்தை பொருத்த பட்டாவானது நத்தம் பகுதியில் எனது தாத்தா குடியேறியதால் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் என் தாத்தா உடைய தகப்பனாரான மாரியப்பகவுண்டர் தாவா சொத்தில் குடியேறினார் அந்த அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது. என் தாத்தாவின் தகப்பனார் மாரியப்பகவுண்டர் என்பவர் தாவா சொத்தில் குடியேறினார் என்பதை காட்டுவதற்கு என் வசம் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் பட்டா கேட்டுள்ளேன் இன்னும் கிடைக்கவில்லை. கரட்டுப்பாளையத்தில் எங்களுக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் என் அம்மா அப்பா சம்பாதித்த வீடு உள்ளது. அய்யம்பாளையத்தில் எங்களுக்கு தாவா சொத்துக்களைத் தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. என் தகப்பனாரின் பூர்வீகம் அய்யம்பாளையம் கிராமம். என் பெற்றோர் எப்போது கரட்டுப்பாளையம் வந்தார்கள் என்றால் என் தாத்தா 2003 இல் இறந்ததற்கு பின்பு ஓரிரு ஆண்டுகள் கழித்து கரட்டுப்பாளையம்

வந்தார்கள். இன்றுவரை என் பெற்றோர்கள் கரட்டுப்பாளையத்தில் தான் குடியிருக்கிறார்கள் என்றால் ஆமாம்.

4. நான் கரட்டுப்பாளையத்தில் இருந்து தான் என் கல்லூரி படிப்பை படித்து முடித்தேன் என்றால் ஆமாம். தாவா சொத்தானது என் தகப்பனாரின் தகப்பனாரான பழனிச்சாமி கவுண்டர் என்பவர் நத்தம் பகுதியில் குடியேறியதன் அடிப்படையில் அவருக்கு வழங்கப்பட்ட பட்டாப்படி அவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், நான் வழக்கிற்காக என் தகப்பனாரின் தகப்பனாரான பழனிச்சாமி கவுண்டர் என்பவரின் தகப்பனார் மாரியப்ப கவுண்டர் என்பவர் தாவா சொத்தில் குடியேறியதன் அடிப்படையில் பழனிசாமி கவுண்டருக்கு பட்டா வழங்கப்பட்டதாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டனாரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் என்பவர் அய்யம்பாளையம் கிராமத்தில் வசிக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு ஆதி சொந்த ஊர் இடைக்காட்டு வலசு என்றால் ஆமாம்.

5. மாரியப்ப கவுண்டர் இடைக்காட்டு வலசு ஊரில் வசித்து வந்து காலமாகிவிட்டார் என்றும் என் பாட்டனரான பழனிச்சாமி கவுண்டர் தான் அய்யம்பாளையம் கிராமத்திற்கு வந்து நத்தம் பகுதியில் குடியேறி அதன் அடிப்படையில் தாவா சொத்தை பொறுத்து பட்டா பெற்றார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களில் பாகம் பெற வேண்டும் என்பதற்காகவே தாவா சொத்துக்களின் தன்மையை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பெயர் அழகு நாச்சிமுத்து என்பதை காண்பிக்க நான் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல்

செய்யவில்லை ஆனால் எனது தகப்பனாரின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் உள்ளது. நான் தற்போது வழக்கிற்காக என் தகப்பனாரின் பெயர் ரவி என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. என் தாயார் மற்றும் தகப்பனாருக்கு இடையே எவ்வித புகார்களோ நீதிமன்ற வழக்குகளோ இல்லை என்றால் ஆமாம். எனக்கும், என் பெற்றோருக்கும் இடையே எவ்வித வழக்குகளும் இல்லை என்றால் வழக்குகள் இல்லை ஒத்து வராததால் தனித்தனியாக வசிக்கிறோம். வழக்கு சொத்திற்கான அசல் பட்டா எதுவும் என் வசம் இல்லை என்றால் ஆமாம். என் தகப்பனாரும், என் தகப்பனாரின் தாயாரும் 1ம் பிரதிவாதிக்கு விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு தான் தெரியும் நான் சொல்வது உண்மை அல்ல என்றும் நானும் எனது தாயார் மற்றும் எனது தகப்பனார் மற்றும் என் தகப்பனாரின் தாயார் ஆகியோர்கள் சேர்ந்துதான் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல.

7. தற்போது மேற்படி சங்கதிகளை நாங்கள் வேண்டுமென்றே மறைத்து உரிய கால வரையறையை கடந்து பொய்யான சங்கரிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனது பிறந்த வருடம் 1993. 2004 ஆம் ஆண்டு எனக்கு சுமார் 12 வயது இருக்குமா என்றால் இருக்கும். 2015 ஆம் ஆண்டு கல்லூரி படிப்பை நான் முடித்தேன் கல்லூரி படித்தபோது நான் வீட்டில் இருந்து படித்துவந்தேனா என்றால் விடுதியில் படித்தேன். விடுதிக்கான

பணத்தை என் பெற்றோர்கள் தான் செலுத்தினார்கள் என்றால் இல்லை கல்வி கடன் பெற்று நான் படித்தேன்.

8. அந்த கடன்களை என் பெற்றோர்கள் வந்து தான் வாங்கி கொடுத்தார்கள் என்றால் ஆமாம். சாமியப்ப கவுண்டர் மகன் சிவசாமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அய்யம்பாளையம் ராமசாமி மகன் வேலுமணி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர்கள் எனது சொந்தக்காரர்கள் தான். அவர்களுக்கும், எனக்கும் விரோதம் இல்லையென்றால் சரிதான். அய்யம்பாளையத்தில் உள்ள சொத்தானது பாகம் பிரித்துக் கொள்ள முடியாத வீட்டிடம் என்றால் சரியல்ல காலியிடம் உள்ளது என் தகப்பனார் 1ம் பிரதிவாதியிடமிருந்து ரூபாய் 14,000/– தொகையை பெற்றுக் கொண்டுதான் பாகபாத்திய விடுதலை ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் அதே தேதியில் 1ம் பிரதிவாதி என் தகப்பனாரிடம் இருந்து என் தகப்பனாரின் தாயாரை பராமரிப்பு செய்வதற்காக ரூபாய் 14,000/–ஐ திரும்ப பெற்றுக் கொண்டார் என் தகப்பனாருக்கும் எனது அத்தையான ஒன்னாம் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற வரவு செலவு குறித்த விவரங்கள் எனக்கு கேள்விப்பட்டதன் அடிப்படையில் தான் தெரியும் என்றால் ஆமாம்.

9. 7ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டை மாற்றிக் கட்டி அதற்கு கதவு எண்.7/151 பெற்று மின் இணைப்பு பெற்றும் பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் என் ஆத்தா 2021 ஆம் ஆண்டு தான் இறந்தார். அதனால் என் ஆத்தாவை பராமரிப்பு செய்து கொண்டு என் அத்தை வீடு கட்டி வந்ததால் அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. 1ம் பிரதிவாதிக்கு ஒரு மகன் மற்றும்

ஒரு மகள் உள்ளார்கள். அவரின் மகள் பெயர் பிரதீபா அவர்தான் மூத்த வாரிசு. அவர் பிறந்த வருடம் 1991 அல்லது 1992 ஆக இருக்கலாம். என் அத்தை மகன் பொன் சங்கர் என்பவர் எனக்கு இளையவர் அவர் பிறந்த வருடம் எனக்கு தெரியவில்லை எனக்கு ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் இளையவராக இருக்கலாம். என் அத்தைக்கு திருமணமாகி எவ்வளவு நாட்கள் கழித்து குழந்தை பிறந்தது என்று விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

10. என் அத்தை என் கணவர் பெயர் சின்னசாமி என்றால் ஆமாம் சின்னசாமிக்கும், பிரதிவாதிக்கும் 1990 ஆம் ஆண்டு திருமணமானது என்றால் இல்லை அதற்கு முன்பே இருக்கும். பொன் சங்கர் பிறந்து 8 மாத குழந்தையாக இருந்தபோது என் மாமா சின்னசாமி தவறிவிட்டார் என்றால் ஆமாம் என் மாமா இறந்ததற்கு பிறகு 1ம் பிரதிவாதி அய்யம்பாளையத்தில் என் தாத்தா பாட்டியுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். என் அத்தைக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. கூலி வேலைக்கு சென்று தான் அவர்கள் குடும்பம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான் என் தாத்தா என் அப்பா இருந்தவரை அவர்கள் பார்த்துக் கொண்டார்கள் என் தயார் குடும்பம் ஏற்கனவே பவர்லூம் தரிதொழில் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

11. என் தகப்பனார் கல்யாணத்திற்கு பிறகு நான் பிறந்ததற்கு பின்பு தான் பவர்லூம் தறியை விரிவு செய்தார்கள் என்றால் இல்லை என் தாயார் குடும்பத்தினருடனே என் தகப்பனார் கரட்டு பாளையத்தில் சென்று தங்கிவிட்டார் என்றும் அங்கிருந்த பவர்லூம் தறி தொழிலை செய்வதற்காகத்தான் பொறுத்து என் அத்தைக்கு பாக பாத்திய

விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு ரூபாய் 14,000/- பணத்தை என் அத்தையிடமிருந்து பெற்றுக் கொண்டு சென்ற என் தகப்பனார் பயன்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உண்மைகளை ஒப்புக் கொண்டால் அது எங்களுக்கு விரோதமாகிவிடும் என்ற காரணத்தினால் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. தற்போது தாவா சொத்தின் விலை ஏற்றத்தினை கருத்தில் கொண்டு நானும் என் தகப்பனாரும் சேர்ந்து கொண்டு 1ம். பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து என் தகப்பனார் விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதை வேண்டுமென்றே தெரியாது என்றும் தற்போது தெரிந்ததாக கூறி சட்ட முறையான கால வரையறைகளை கடந்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியாக நான் உரிமை வயதை அடைந்து 13 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்ய சட்டப்படி கால வரையறையால் நான் தடை செய்யப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

13. அதனால்தான் என் தகப்பனார் இந்த வழக்கில் என்னோடு ஒத்துழைத்து எதிர்வாதம் செய்யாமல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கே என்னாலும் என் தகப்பனார் ஆளும் ஒன்றிணைந்து போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் நானோ என் தகப்பனாரரோ 20 ஆண்டுகளுக்கு மேலாக சுவாதீனத்திலிருந்து வரவில்லை என்பதால் எங்களுக்கு இந்த

வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.16 18:56:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்